DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : திரு.கிருஷ்ணசாமி | Father/Husband Name : மாடசாமி |
| Age : 56 | Village : சாத்தூர் |
| Taluk : | Calling : சிறப்பு சார்பு ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13 August 2025

(A2, A3 charge abated. A1 Present)

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது சாத்தூர் நகர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 22.02.2017ம் தேதி சாத்தூர் நகர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது, சாத்தூர் நகர் சார்பு ஆய்வாளர் திரு.சதீஸ்குமார் அவர்களுடன் நான் மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பன்னீர்செல்வம் ஆகியோர்கள் சாத்தூர் வைப்பாற்றில் மணல் திருடும் நபர்கள் சம்பந்தமாக ரோந்து செய்து கண்காணித்து சாத்தூர் மேலகாந்தி நகர் பகுதியில் இருந்தபோது சார்பு ஆய்வாளருக்கு 15.00 மணிக்கு கிடைத்த தகவலின் பேரில் சாத்தூர் பைபாஸ் ரோட்டில் உள்ள நகராட்சி பூங்கா அருகில் உள்ள பாலத்தின் அடியில் உள்ள சர்வீஸ் ரோட்டில் வந்த TN 58 S 5225 என்ற பதிவெண்கொண்ட டாடாஏஸ் வாகனத்தை சார்பு ஆய்வாளருடன் நாங்களும் சோதனை செய்தபோது பிளாஸ்டிக் பையில் மணல் முட்டைகள் இருந்தது.

3. அந்த வாகனத்தின் ஓட்டுனரை சார்பு ஆய்வாளர் விசாரிக்க அவர் சாத்தூர் முத்துராமலிங்காபுரத்தை சேர்ந்த மணி மகன் சங்கர் வயது 34/2017 என்றும், அருகில் சீட்டில் உட்கார்ந்திருந்த நபரை விசாரிக்க சாத்தூர் எல்.எப். கிணற்று தெருவை சேர்ந்த சோமசுந்தரம் மகன் வெள்ளைச்சாமி வயது 33/2017 என்று கூறினார். மீண்டும் ஓட்டுனரை விசாரிக்க அவர் ஓட்டி வந்த டாடாஏஸ் வாகனத்தை சாத்தூர் நடராஜா தியேட்டர் ரோட்டில் உள்ள முனியசாமி ஆசாரி என்பவரின் மனைவி பெயரில் இருப்பதாகவும், அதை அவரிடமிருந்து மாத வாடகை ரூ.7750/-க்கு பேசி 01.02.2017ம் தேதி முதல் எடுத்து ஓட்டி வந்ததாகவும், கட்டுபடியாகத காரணத்தினால் சாத்தூர் போக்குவரத்து நகரில் உள்ள முத்துச்சிங்கபாண்டியன் மகன் பொன்மாரி மற்றும் எல்.எப்.கிணற்று தெருவை சேர்ந்த வெள்ளைச்சாமி ஆகியோர்களுடன் பேசி இரவு நேரத்தில் சாத்தூர் படந்தால் சக்கதிமாரியம்மன் கோவில் பின்புறமுள்ள வைப்பாற்றில் மணலை அள்ளி எந்தவித அனுமதியோ, உரிமமோ இல்லாமல் அள்ளி போக்குவரத்து நகரில் உள்ள பொன்மாரி வீட்டின் முன்பு போட்டு வைத்ததாகவும் கூறினார்.

4. மேலும், சம்பவத்தன்று, பொன் மாரி சொன்னதின் பேரில் 45 பிளாஸ்டிக் பையாலான மூட்டைகளை ஏற்றிக்கொண்டு சென்றால் ரூ.1000/- வாடகை கொடுப்பதாகவும், சாத்தூர் தென்றல் நகரில் உள்ள கட்டிடத்திற்கு கொண்டு செல்லுமாறு சொன்னதின் பேரில், மேற்படி மணல் மூட்டைகளை கொண்டுவந்ததாகவும், அதற்கு எந்தவித உரிமமோ, நடச்சீட்டோ இல்லை என்று கூறினார்.

5. சார்பு ஆய்வாளர் அரசு அனுமதியில்லாமலும், உரிமம் இல்லாமலும் அரசு கனிம வளமான மணலை கொண்டு வந்ததால் மேற்படி சங்கர் மற்றும் வெள்ளைச்சாமியை 15.15 மணிக்கு கைது செய்து சம்பவ இடத்தில் அத்தாட்சி தயார் செய்து அதில் மணலுடன் கூடிய TN 58 S 5225 என்ற பதிவெண்கொண்ட டாடாஏஸ் வாகனம், பிளாஸ்டிக் பையினாலான மூட்டைகள் – 45 ஆகியவற்றை கைப்பற்றினார். தனிநபர்கள் யாரும் அத்தாட்சியில் கையொப்பமிட முன்வராததால் போலீஸ் பார்ட்டியாகிய நானும், பன்னீர் செல்வமும் அத்தாட்சியில் கையொப்பமிட்டோம். சம்பவ இடத்தில் தயார் செய்த அத்தாட்சி என்னிடம் காட்டப்படுவது தான். அந்த அத்தாட்சியில் வலது பக்கமுள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(அத்தாட்சி அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** நாங்கள் கைப்பற்றிய TN 58 S 5225 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் புகைப்படம் என்னிடம் காட்டப்படுவது தான். **(டாடாஏஸ் அந்த வாகனத்தின் புகைப்படம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

6. எதிரிகள் மற்றும் சம்பவ இடத்தில் அத்தாட்சியின் பேரில் கைப்பற்றப்பட்ட சொத்துடன் நிலையம் 16.30 மணிக்கு வந்து நிலைய குற்ற எண் 108/2017 பிரிவுகள் 379 இ.த.ச மற்றும் 21(1) Mines and Minerals Act ன் கீழ் வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இவ்வழக்கு சம்பந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

7. இந்த வழக்கு சம்பந்தமாக என்னை உதவி ஆய்வாளர்கள் சசிகுமார் மற்றும் அய்யனார் ஆகிய இருவரும் விசாரித்தார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் பார்த்திபன் என்னை விசாரித்து என்னுடைய வாக்குமூலத்தை பதிவு செய்தாரா என்றால் இல்லை. பொதுவாக எங்களுடைய உயர் அதிகாரிகள் எழுத்து மூலமான உத்தரவின் பெயரில் தான் ரோந்து பணிக்கு செல்வோம் என்றால் உத்தரவின் பெயரில் செல்வோம். எங்களுக்கு எந்த உயர் அதிகாரி இந்த வழக்கில் ரோந்து செல்ல வாய்மொழியாக உத்தரவு கொடுத்தார் என்றால் உதவி ஆய்வாளர் சசிகுமார் எங்களை ரோந்து பணிக்கு வருமாறு அழைத்தார்.

8. எங்களை எத்தனை மணிக்கு உதவி ஆய்வாளர் சசிகுமார் ரோந்து பணிக்கு வருமாறு அழைத்தார் என்றால் காலை 08.00 மணிக்கு எந்த பாதை வழியாக ரோந்து பணிக்கு செல்ல வேண்டும் என்று கூறிவிட்டார், நாங்கள் 09.00 மணிக்கு புறப்பட்டோம். என்னுடைய பாக்கெட் டைரி மற்றும் காவல் நிலைய பொது நாட்குறிப்பு பதிவேடு ஆகியவற்றை பார்வையிட்டால் சம்பவ தேதியில் நான் ரோந்து பணிக்கு சென்றேனா என்பது தெரியவரும் என்றால் சரிதான்.

9. அத்தாட்சியை சம்பவ இடத்தில் வைத்து உதவி ஆய்வாளர் சசிகுமார் சொல்ல சொல்ல நான் எழுதினேன். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அத்தாட்சியில் எழுதப்பட்டுள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து என்றால் சரிதான். அந்த அத்தாட்சியின் முதல் பக்கத்தில் குற்றம் சாட்டப்பட்ட நபர்களிடம் கையெழுத்து வாங்கவில்லை என்றால் சரிதான். கைப்பற்றபட்டதாக கூறும் வாகனத்தில் ஓம் சிவ கணேசா என்று பெயர் பலகை இருந்ததாக அத்தாட்சியில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதேபோல் முன் பக்கம் இருக்கக்கூடிய கண்ணாடியில் சரஸ்வதி மோட்டார் வொர்க்ஸ் என்று எழுதப்பட்டிருந்ததாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள

அத்தாட்சியில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

10. வாகனத்தில் இருந்ததாக கூறப்படும் 45 பிளாஸ்டிக் பைகளில் ஏதேனும் அச்சிடப்பட்டிருந்ததா? என்பதையும், அதன் நீளம் மற்றும் அகலம் போன்ற விபரத்தையும் அத்தாட்சியில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாகனத்தின் புகைப்படத்தில் மணல் மூட்டைகள் காணப்படவில்லை என்றால் சரிதான். 22.02.2017 ஆம் தேதி நாங்கள் ரோந்துக்கு சென்ற நேரமும் சம்பவ இடத்திற்கு சென்ற நேரமும் என்னவென்றால் காலை 09.00 மணிக்கு ரோந்து பணிக்கு புறப்பட்டு சென்றோம், மதியம் 15.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றோம். சாத்தூரில் இரண்டு பூங்கா இருக்கிறது என்றால் பைபாஸ் அருகே ஒரு பூங்கா தான் இருக்கிறது. பூங்காவின் பெயர் சொக்கலிங்கம் பூங்கா என்றால் சாத்தூர் நகராட்சி பூங்கா ஆகும். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், அதனால் தான் அந்த பூங்காவின் பெயர் எனக்கு சரியாக தெரியவில்லை என்றாலும், அந்த பூங்காவின் பெயர் சொக்கலிங்கம் பூங்கா என்றாலும் சரியல்ல.

11. வழக்கு சம்பவ இடம் பூங்காவிற்கு எந்த பக்கம் இருக்கிறது என்றால் கிழக்கு பக்கம் இருக்கிறது. சாத்தூர் நகரில் இருந்து மேற்கு பக்கம் உள்ள ஊர்களுக்கு செல்வதற்கு இந்த வழக்கில் கூறக்கூடிய பூங்கா அருகே உள்ள சாலை வழியாகத்தான் செல்வார்கள் என்றால் சரியல்ல, மேல காந்தி நகர் பகுதிக்கு செல்லக்கூடிய நபர்கள் மட்டும்தான் அந்த வழியாக செல்வார்கள். படந்தால் ஊர் வழியாக செல்லக்கூடிய நபர்கள் பைபாஸ் சாலையில் உள்ள படந்தால் ஜங்ஷன் வழியாக செல்வார்கள். மேற்படி பாதை வழியாக தினமும் சுமார் ஒரு லட்சம் நபர்கள் பயணம் செய்வார்கள் என்றால் சரியல்ல. அதனால் அந்த இடத்தில் பொதுமக்கள் இல்லை என்று கூறுவது தவறு என்றாலும், அத்தாட்சி காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு அங்கு வைத்து என்னால் சாட்சி கையொப்பம் செய்யப்பட்டதால் தான் பொதுமக்கள் யாரும் அந்த இடத்தில் இல்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. அதனால்தான் குற்றம் சாட்டப்பட்ட நபர்களிடம் அத்தாட்சியின் முதல் பக்கத்தில் கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரியல்ல.

12. காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் குற்றம் சாட்டப்பட்ட நபர்களை அச்சுறுத்தி அந்த அத்தாட்சியில் கையொப்பம் பெற்றோம் என்றால் இல்லை. உண்மையிலேயே 45 மூட்டைகளை கைப்பற்றி இருந்தால் அதற்கான புகைப்படத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல. நாங்கள் சம்பவ இடத்தில் வைத்து வாகனத்தை கைப்பற்றவில்லை என்பதால் தான் வாகனத்தின் பெயர் பலகை மற்றும் வாகனத்தின் முன்பக்க கண்ணாடியில் எழுதப்பட்டிருந்த விபரங்களை நாங்கள் கைப்பற்றிய அத்தாட்சியில் கூறவில்லை என்றால் சரியல்ல.

13. என்னை உதவி ஆய்வாளர் சசிகுமார் எப்பொழுது விசாரித்தார் என்றால் சம்பவ தேதியில் நாங்கள் காவல் நிலையத்திற்கு சென்ற பிறகு மாலை சுமார் 17.00 மணிக்கு மேல் விசாரணை செய்தார். புள்ளி விபர கணக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து இந்த வழக்கு அத்தாட்சி தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இரண்டு எதிரிகளை நாங்கள் சம்பவ இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றாலும், வீட்டிலிருந்த அவர்களை நாங்கள் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றோம் என்றாலும் சரியல்ல. வழக்கு சம்பவம் காலத்தில் ஒன்றாவது எதிரி சங்கர் என்பவருக்கு

வாகனம் ஓட்ட தெரியாது என்றாலும், அவருக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றாலும், ஆனால் அவரை வழக்கில் பொய்யாக அவர் வாகனத்தை ஓட்டியதாக சேர்த்துள்ளோம் என்றாலும் சரியல்ல.

14. இது புள்ளிவிபரத்திற்காக பதிவு செய்யப்பட்ட வழக்கு என்றாலும், எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. பொய்யாக பதிவு செய்யப்பட்ட வழக்கு என்பதால் தான் எங்களால் கைப்பற்றப்பட்டதாக கூறும் வாகனம் என்று வரை நீதிமன்ற காவலில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate 2, Sattur